**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**

**முதலாம் ஆண்டு – முதற்பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (OFFLINE WRITTEN EXAMINATION)**

**நவம்பர் – திசம்பர் 2018**

**C011 இருபதாம் நூற்றாண்டு கவிஞர் இருவர்**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

**பிரிவு – 1**

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. பாண்டிச்சேரியில் பாரதியார் எத்தனை ஆண்டுகள் தங்கினார்?
2. பாரதியார் விரும்பிய தமிழ்ப் புலவர்கள் யாவர்?
3. எதைத் தெய்வமென்று பாரதியார் குறிப்பிடுகிறார்?
4. பாரதியார் ஈடுபாடு கொண்ட இந்தியத் தலைவர்கள் யாவர்?
5. பாரதியார் புதிதாகப் படைத்த கவிதை வடிவம் எது?
6. குயில்பாட்டு எங்கு எழுதப்பட்டது?
7. வந்தே மாதரம் பாடலின் ஆசிரியர் யார்?
8. தமிழை வளப்படுத்த பாரதியார் சொன்ன வழிமுறை ஒன்றைச் சுட்டுக.
9. பாரதிதாசனை திரைப்பாடல் எழுத முதலில் அழைத்தவர் யார்?
10. கல்வி இல்லாத சமுதாயம் எது போன்றது?
11. தமிழ் வளர்ச்சிக்குத் தடையாக பாரதிதாசன் எதைக் குறிப்பிடுகிறார்?
12. சஞ்சீவி மலையை அனுமன் எவ்வாறு தரையில் வைத்தார் என கவிஞர் கூறுகிறார்?
13. தமிழ்த்தொண்டு செய்வது எதைப் போன்றது என்கிறார் புரட்சிக் கவிஞர்?
14. நற்றமிழர் சேர்த்த புகழாக பாரதிதாசன் எதை குறிப்பிடுகிறார்?
15. எந்த உள்ளத்தில் சண்டை இருக்காது என்று பாரதிதாசன் குறிப்பிடுகிறார்?

## பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக. (5x3=15)**

1. பாரதியின் 'வேண்டுதல்' எவ்வகையில் எல்லாம் அமைந்தது?
2. பெண் விடுதலைச் சிந்தனைகளாக பாரதியார் குறிப்பிடுவன யாவை?
3. பாஞ்சாலி சபதத்தின் மையக் கருத்தியலை விவரிக்க.
4. தமிழ் இனப் பெருமைகளைப் பாரதியின் பாடல்கள் வழி எடுத்துரைக்க.
5. பொது உடைமை குறித்து பாரதிதாசன் பாடல்கள் எங்ஙனம் எடுத்துரைக்கின்றன?
6. சஞ்சீவி பர்வதத்தின் சாரல் – காப்பியக் கட்டமைப்பை எழுதுக.
7. 'சிறுவர்களுக்காக' பாரதிதாசன் பாடல்கள் எங்ஙனம் அமைகின்றன?
8. புரட்சிப் பெண்களைப் பாரதிதாசன் பெண் கதாப்பாத்திரங்கள் வழி எடுத்துரைக்க.

## பிரிவு – 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக. (3x15=45)**

1. (அ) உலகளாவிய நோக்கில் பாரதியின் சிந்தனைகள் அமைந்திருக்கும் விதம் குறித்துக் கட்டுரை வரைக.

(அல்லது)

(ஆ) பாரதியின் முப்பெரும் பாடல்கள் குறித்துக் கட்டுரை வரைக.

2. (அ) தமிழ்க் கவிதை மரபில் பாரதியின் இடம் குறித்துக் கட்டுரை எழுதுக.

(அல்லது)

(ஆ) பாரதிதாசனின் சமுதாயச் சிந்தனைகள் குறித்துக் கட்டுரை வரைக.

3. (அ) தமிழின் பெருமைகளை, சிறப்புகளைப் பாரதிதாசன் எவ்வாறெல்லாம் போற்றியுரைக்கிறார்?

(அல்லது)

(ஆ) பாரதிதாசன் நாடகங்களின் கருப்பொருள்கள் எவ்வாறெல்லாம் அமைகின்றன? விளக்குக.

***